உ

சிவமயம்



சங்கானை மண்ணின் தவப்புதல்வன்

# அமரர் முத்துக்குமாரு சுப்பிரமணியத்தின்

# சிவபதப்பேறு குறித்த

# சுப்பிரமணிய மாண்மியம்

23.02.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்மை நெறிநின்ற உத்தமர்
கல்விக்கண் திறந்த நல்லாசான்



கல்விப்பணிக்கு
05.02.1935

இறைபணிக்கு
24.01.2012

அமரர்
# முத்துக்குமாரு சுப்பிரமணியம் அவர்கள்
(ஓய்வு நிலை பிரதி அதிபர் - யா/ நடேஸ்வரக்கல்லூரி)

## திதி வெண்பா

ஆண்டு கரமது தைத்திங்கள் சேர்நாளில்
மாண்ட சுப்பிரமணியம் பூர்வபக்ஷ துதியையில்
ஈண்டிவ் வுலககன்ற நன்புகழ் கூறுமுக்
கண்ணு[illegible] நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் கணபதி நமஹ



சங்கானையைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்களான முத்துக்குமாரு அன்னம்மா

தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்

# அமரர் முத்துக்குமாரு சுப்பிரமணியம்

அவர்களின் சிவபதம்பேறு குறித்த

# சுப்பிரமணிய மாண்மியம்

## 23-02-2012.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே!"
வையகந்தனில் நல் மாணாக்கர் பலரை
உருவாக்கி அவர்களுக்குக் குருவாகவும்
தந்தையாகவும் நின்று சான்றோராக்கிய
பெருமைக்குரியவர் அமரர் சுப்பிரமணியம்.
தனக்குப் புத்திரபாக்கியம் கிட்டாவிட்டாலும்
தனது சகோதரர்களாகிய எம் அனைவரது
பிள்ளைகளையும் அவர்களுக்குத்
தந்தையாகிநின்று
"தந்தை மகற்காற்று முதவி யவையத்தில்
முந்தியிருப்பச் செயல்" என்ற
பொய்யாமொழியின் வாக்கிற்கமைய
அவர்கள் அனைவரையும்
நற்சான்றோனாக்கிய எமது குடும்ப மூத்து
அமரர் சுப்பிரமணியம் அவர்களின்
சிவபதப்பேறு குறித்த 31 ஆம் நாள்
நினைவில் இந்த மலரை வெளியிட்டு
அவரது பாதக்கமலங்களில்
சமர்ப்பணம் செய்கின்றோம்.

– குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெறியத் தமிழ்வேதத் திருமுறைப்பாக்கள்



## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

## தேவாரம்

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சி வாயவே

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூக்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவாறு ஆர்பெறுவா அச்சோவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விளங்குங் கற்பகக் கனியை
கரையிலா கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்கள் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மண்ணுக தில்லை வளர்கநம் பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொண்ணின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெலாம் -
விளங்க
அன்னநடை மடவாளுமை கோனடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு
- கூறுதுமே

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வலிதாம் இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைமலர் உச்சிமேற் குவித்து
பண்ணினால் நீடி அருவி வரும் பதிகம்
பாடினார் பாவினார் பணிந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா மானதற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே

வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்கசெவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீர் அடியார் எல்லாம்

## திருமந்திரம்

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பெயரினை நீக்கி பிணமென்று பெயரிட்டு
சூரியங் காட்டினிற் கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தனரே

## பட்டனத்தார்

முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே
பின்னை யிட்டதீ தென்னி லங்கையில்
அன்னை யிட்டதீ யடி வயிற்றிலே
யானு மிட்டதீ மூள்க மூள்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை நோக்கு

"எண்சாண் உடம்பின் சென்னி" போன்று ஈழமணித் திருநாட்டின் வடபால் தலையாயதாகத் திகழ்வது யாழ்ப்பாண மாவட்டம். இது முற்றுமுணர்ந்த முனிவப் பெருந்தகையாகிய திருமூலரால் 'சிவபூமி' எனப் போற்றிப் பெருமிதங்கொள்ளப்பெற்றது. இவ்வாறு போற்றப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் பனை வளமும் நிலவளமும் கரையோரக் கடலலைகள் கரையினை முத்தமிடும் எழில்கொஞ்சும் காட்சிகளும் சோவென்ற நெற்கதிர்கள் அசைந்தாடி இனிமையான தென்றல் காற்றில் துவழும் இனிய பிரதேசம் வலி.மேற்கு. வலிமேற்கைச் சிறப்புமிகு பிரதேசமாக்கி - அதன் புகழை அகிலமெலாம் பரவும் வகைசெய்யும் கல்வியறிவுடை ஆன்றோரும் சான்றோரும் சைவ ஆசார சீலர்களும் வாழ்ந்து வந்த - வருகின்ற - புண்ணிய பூமி சங்கானை. சங்கும் யானையும் போத்துக்கேயர் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சம்பில் துறைமுகத்தில் ஏற்றுவதற்குப் பயன்படுத்திய தெய்வீக இடமாகையால் இப்பிரதேசம் சங்கானை எனக் காரணச் சிறப்புப் பெயர் பெறலாயிற்று.

சங்கானைப் பதியிலே சிலம்புப் புலியடி வைரவரை வணங்கி அங்குவாழ்ந்த சைவ ஆசார சீலர் முத்துக்குமாரு. அவருக்கும் அவர் கைம்மனை அன்னம்மாவுக்கும் இல்லறம் சிறந்திட 1935 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி சிரேஷ்ட மகனாகத் திருவவதாரம் செய்தார் சுப்பிரமணியம். பெற்றோர் இவருக்கு சுப்பிரமணியம் என்னும் முருகனின் நாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டிச் செல்லமாக வளர்த்து வந்தார்கள். இளவயது முதல் இவர் துடிப்புள்ளவராகவும், விவேகம் மிக்கவராகவும், புத்திக்கூர்மை உடையவராகவும் கல்வி மீது அதீத விருப்புடையவராகவும் தெய்வபக்தி கொண்டவராகவும் விளங்கினார். தனது ஆரம்பக் கல்வியை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும் பின் "ராஜா ஸ்கூல்" என்று அப்போது அழைக்கப்பட்ட சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்றார். அங்கு கல்வி கற்று N.P.T.A. பரீட்சையில் முதல் மாணவனாகச் சித்தியடைந்ததும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உயர் கல்வியைக் கற்றார்.

கல்வியில் திறமையுள்ள இவர், உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தினார். பின், 1954 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். அங்கு பௌதிகவியல், பிரயோக கணிதம் பாடங்களில் சிறப்புத் தேர்ச்சியுடையவராகத் திகழ்ந்தார். இவர் அங்கு இறுதிவருடத்தில் கல்வி கற்றுக்கொண்டிருக்கின்ற காலத்தில் 1957 ஆம் ஆண்டு அவரது தந்தை நோய்வாய்ப்பட்டு யாழ்.பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தார்.

கல்வியின் சிறப்பை உணர்ந்த இவரது தாயார், தந்தை உயிரிழந்த செய்தியைக் கூட மகனுக்கு அறிவிக்கவில்லை. ஏனெனில், இறுதிப் பரீட்சைக்குத் தயாராகிய தனது மகனின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்பதே அவரின் நோக்கம். தற்காலம் போன்று அந்தக் காலத்தில் தொலைபேசி, பக்ஸ் வசதிகள் என்பன இல்லை. தபால், தந்திச் சேவை மட்டுமே காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் சீராக நடைபெறுவதில்லை. மந்தகதியிலேயே நடைபெற்றது. தாயார் தனது இரண்டாவது மகன் மற்ற மக்களுடன் தந்தையின் கடமைகளை நிறைவேற்றினார்.

பரீட்சையைத் திறம்பட எழுதிமுடித்த இவர், தனது பரீட்சை தொடர்பில் தந்தையுடன் அளவுளாவுவதற்காக ஆவலோடு தந்தையைக் காண ஓடோடி வந்தார். வீடு வந்ததும் தந்தையின் மரணச் செய்தியறிந்து துடிதுடித்தார்; கதறினார். தந்தையின் இறுதிக் கடமைகளைக்கூட ஆற்றமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டேனே என்று மனம்மிகவருந்தினார்.

பதியிழந்து கதியற்றுநின்ற தன் குடும்பத்தைத் தாங்குகின்ற நிலைக்களனாக இவர் திகழ்ந்தார். 1958 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் முகாமைத்துவம் இவரைப் பகுதிநேர ஆசிரியராகத் தற்காலிகமாக நியமித்தது. 20 Km தூரம்வரை துவிச்சக்கர வண்டியில் சென்றே தனது ஆசிரியப் பணியை ஆரம்பத்தில் மேற்கொண்டு வந்தார்.

நடேஸ்வரக் கல்லூரியில் கற்பித்தல் தொழிலில் மிகவும் அக்கறையுடனும் ஆசிரியத்துவத்தை ஒரு தொழிலாகக் கருதாது சேவையாக எண்ணி மாணவர்களுக்கு பௌதிகவியல், தூய கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்து நல்மாணாக்கர் பலரை உருவாக்கினார். இவரது சேவை நோக்கையும் அர்ப்பணிப்பையும் வித்துவத்தையும் கற்பித்தல் திறனையும் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகைப்புற்ற கல்லூரி முகாமைத்துவம் 1959 ஆம் ஆண்டில் நிரந்தர நியமனம் வழங்கி இவரைத் தன்னோடு சேர்த்துக்கொண்டது.

1959 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு ஓய்வூதியம் பெறும் காலம் வரை கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் நடேஸ்வரக் கல்லூரியிலே சேவையாற்றினார். வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றங்கள் வந்தபோதும் காங்கேசன்துறைச் சமூகம் இவரை மாற்றலாக விடவில்லை. தமது சந்ததியின் கல்வி வளர்ச்சிக்கென்றே இவரைப் பயன்படுத்தியது. மூன்று சந்ததியினர் இவரிடம் கல்வி பயின்றமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்ல, பாடசாலையில் அதிபர்களாகக் கடமையாற்றியவர்களிலும் பார்க்க பாடசாலையை முன்னேற்றுவதில் இவரே அதிக அக்கறையுடையவராகத் திகழ்ந்தார். இறுதிக்காலத்தில் தகுதிநிலை பிரதி அதிபராகக் கடமையாற்றி ஓய்வுநிலை அடைந்தார்.

தேசம் தளைத்திட சிறந்த நல்மாணாக்கரை உருவாக்கினார். இதற்கு இவரது இறுதிப் பயணத்தில் அவரது மரணச் செய்திகேட்டு ஓடோடி வந்து பல உயர் நிலைகளிலுமுள்ள கல்விமான்களும் பெரியார்களும் வந்து கண்ணீர் மல்க உரையாற்றி அஞ்சலி செய்தமை சான்று பகர்ந்தது.

பின்பு தாயாருடன் குடும்பப் பொறுப்பை ஏற்று "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதற்கிணங்க, தன்னிலும் 8 வயது இளையவரான தனது சகோதரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மாவை மிகவும் செல்லமாக வளர்த்தார். சகோதரி சிறுவயதில் விடுகின்ற குறும்புகள், பிடிவாதங்கள் அனைத்தையும் தானே தாயாகிநின்று தீர்த்துவைத்தார். அவ சுகவீனமுற்றபோது - நோயால் வருந்தும்போதும் கூட அவவை ஆற்றுப்படுத்தி நல்ல தாயாகத் திகழ்ந்தார். பின் சகோதரிக்கு அவ்வூரைச் சேர்ந்த வைத்திலிங்கம் பொன்னுத்துரை என்பவரைுக்கு 1963 மார்ச் மாதம் திருமணம் செய்துவைப்பதற்கு பல இன்னல்கள் மத்தியிலும் தனது புத்திக் கூர்மையால் அவற்றைத் தீர்த்து அவ்வூர் மக்கள் வியக்கும் வகையில் திருமணம் செய்துவைத்தார்.

இவருக்கும் திருமணம் செய்யவென எண்ணிய தாயார், அவ்வூரைச் சேர்ந்த ஆசிரியரான கந்தசாமி புஷ்பராணி ஆசிரியரை அணுகி, உடுவிலைச் சேர்ந்த மலேசியாவின் ரைப்பிங் நகரில் நீதிவானாகக் கடமையாற்றியவரும் உடுவிலை வதிவிடமாகக் கொண்டவருமான அப்புத்துரை - இராசம்மா தம்பதியின் மூன்றாவது மகளான செல்வம் (கிச்சி ரீச்சர்) 1963 ஆம் ஆண்டு ஒக்டோபரில் திருமணம் செய்து இல்லறத்தைச் சிறப்புற இனிதேயாற்றினார். இல்லறத்தில் இணைந்தாலும் தனது குடும்பம் மீதுள்ள அக்கறையை அவர் மனைவியின் முழு ஒத்துழைப்புடனும் சிறப்பாக ஆற்றினார். ஓய்வு நேரங்களில் மாணவர்களுக்கு தனது வீட்டில் வைத்து பௌதிகவியல் கற்பித்து தரமான மாணவர்களாக்கினார்.

அவரது அடுத்த சகோதரன் நடராசா. அவருக்கு 1970 ஆம் ஆண்டு அந்த ஊரைச்சேர்ந்த குருநார் இலட்சுமி தம்பதிகளின் மகள் இராசமணியைத் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துவைத்து தொடர்ந்து கார்த்திகேசு இராசையா பொன்னம்மா தம்பதியரின் மகள் சந்திரகாணத்துக்குத் (சித்திரா) திருமணம் செய்துவைத்து அதனைத் தொடர்ந்து 1971 ஆம் ஆண்டு இளைய சகோதரி தனவதிக்கு (இந்திரா) சொந்த மைத்துனர் கந்தையா குருமூர்த்திக்குத் திருமணம் செய்துவைத்தார். இறுதியாக இளைய சகோதரர் கதிரவேலுவுக்கு அவ்வூர் சிவராசா செல்லம்மா தம்பதியரின் மூன்றாவது மகள் இந்திராணிக்குத் திருமணம் செய்துவைத்தார். சகோதரங்களுக்குத் திருமணம் செய்துவைத்தமை மட்டுமல்லாமல் அவரது சகோதரங்களின் கஷ்ட நஷ்டங்களில் தனது மனைவியுடன் இணைந்து புத்திமதி கூறுவதிலும் அவர்களது பிள்ளைகளுக்குக் கல்வி ஊட்டி, புத்திமதிகள், அறிவுரைகள் கூறி, சகோதரர்களின் பிள்ளைகளை ஊர்போற்றுமுத்தமர்களாக வாழும் வகைசெய்தார்.

அத்துடன், புன்சிரிப்புடன் நண்பர்கள், உறவினர்கள், அயலவர், சுற்றத்தாருடன் தந்தையாகவும், சகோதரனாகவும் வாழ்ந்துவந்தார். உதாரணமாக, காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் கற்பிக்கும்போது விதானையார் வளவு, குருவீதி காங்கேசன்துறையில் வாழ்ந்த திருதிருமதி சின்னத்தம்பி - புவனேஸ்வரி குடும்பம், வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு குடும்பத்தினர், பரஞ்சோதி மாஸ்டர் (காங்கேசன்துறை) குடும்பத்தினர், திரு.சி.சிவசண்முகம்பிள்ளை (இராசதுரை - உடுவில்) ஆகிய குடும்பங்களுடன் மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கமாகப் பழகி, அவர்களது குடும்ப அங்கத்தவர் யாவருடனும், நண்பர்களாகவும், கல்வியூட்டும் ஆசானாகவும், தந்தையாகவும் வாழ்ந்து இறுதிக் காலம்வரை அவர்களது குடும்பத்துடன் அன்னியோன்ய மாக வாழ்ந்து வந்தார்.

இவரது குடும்ப வாழ்க்கையில் சகல செல்வ போகமிருந்தும் கொஞ்சிக்குலாவ ஒரு குழந்தைச் செல்வமில்லை என்றாலும் அந்தக் குறையை வெளிக் கொணராது முகமலர்வோடு தன் உடன்பிறந்த சகோதரங்களின் பிள்ளைகளையும் உடன்பிறவாத பிள்ளைகள் மருமக்களுடன் அன்புடன் இன்முகத்துடன் வரும் போதெல்லாம் வரவேற்று சந்தோஷமடையும் காட்சியை இனி எப்போது காண்போம்? அதைவிடுத்துத் தனது பெறாமக்கள் மருமக்களைச் சிறுவயதிலிருந்து புகைப்படக் கருவிகொண்டு புகைப்படமெடுத்து அவற்றை ரசித்த காட்சி எங்கே? இதற்கெல்லாம் உறுதுணையாக அவரது மனைவியார் ஒத்துழைப்புடன் இருந்து 1987 ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு சங்கானை நாகநாதன் மருத்துவமனையில் குறைந்தது 3 மாதகாலமாக அவரும் அவரது உறவினர்களின் உதவியுடனும் அவரைத் தாயாகவிருந்து பராமரித்து பிரிந்தும் கூடத் தனது வாழ்க்கையை இறுதிக்காலம் வரை வாழ்வாங்கு வாழ்ந்து 2012 ஆம் ஆண்டு தை மாதம் 24 ஆம் திகதி வானுறையும் தெய்வமாகினார்.

*தொகுப்பு:*

*மு.கதிரவேலு (இளைய சகோதரன்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அன்பே சிவம்
*Love is God*

## ஸ்ரீ நகுலாம்பிகா சமேத
## Sri Nagulambika sametha
## Sri Naguleswara swamy Temple

Sivasri
K. Naguleswara Kurukkal *J.P. (All Island)*
Governing Authority & Chief Priest
Naguleswaram, Keerimalai
Kankesanthurai, Sri Lanka.
T.P No: 060221 2440

சிவஸ்ரீ
கு.நகுலேஸ்வரக் குருக்கள் (ச.நி)
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா
தொ. இல: 060221 2440



அண்மையில் அமரத்துவமெய்திய திரு. முத்துக்குமாரு சுப்பிரமணியம் அவர்கள் அமரத்துவமடைந்துவிட்டார் என்ற செய்தியறிந்து பேரதிர்ச்சி கொண்டேன்; மனமிகவேதனையுற்றேன்.

சுப்பிரமணியம் அவர்கள் எமது ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். இவர் நடேஸ்வரக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் அடுக்கடி எமது ஆலயத்துக்கு வந்து எம்பெருமானைத் தரிசிப்பார். கல்லூரி நிர்வாகத்தைத் திறம்பட நடத்துகின்ற ஒரு சிறந்த நிர்வாகி. நடேஸ்வராக் கல்லூரியில் எத்தனையோ ஆசிரியர்கள், அதிபர்கள் கடமையாற்றியிருப்பினும் நடேஸ்வராக் கல்லூரி மாணவர்களால் பெரிதும் மதிக்கப்பட்டு இன்றும் நினைவுகூரப்படுபவர் அமரர் சுப்பிரமணியம் அவர்களே!

பிறப்பிலன்றே எமக்கு இறப்பும் எழுதப்பட்டுவிட்டது. இதிலிருந்து எவரும் தப்பிவிட இயலாது. இவரது மரணம் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

இவரது பிரிவால் துயருறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதல் கூறி, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ
**கு.நகுலேஸ்வரக் குருக்கள்** (ச.நி)
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
நகுலேஸ்வரம், கீரிமலை,
காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா
தொ. இல: 060221 2440



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P. No : 021-3213151

தலைவர் :
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு. திருமுருகன். B.A.

உப-தலைவர் :
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்

பொதுச் செயலாளர் :
வைத்தியகலாநிதி
தி. திவாகரன்

இணைச் செயலாளர்கள் :
திரு. நா. தவநாதன்
திரு. மு. அருளையா

தனாதிகாரி :
திரு. அ. சண்முகநாதன்

உப-தனாதிகாரி :
திரு. சு. ஏழூர்நாயகம்



## பிரார்த்தனையுரை

பல்துறையாற்றல்மிக்க நல் ஆசான் அமரர் மு.சுப்பிர மணியம் அவர்களின் திடீர் மறைவுச் செய்தியறிந்து திடுக்குற்றேன். பண்பும் பரிவும் மிக்க ஈரநெஞ்சுடைய இனிய மனிதனைக் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக யான் நன்கு அறிவேன்.

புகழ்பூத்த சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியில் மிகச் சிறந்த மாணவனாக விளங்கி, பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெற்றவர். கணிதம், பௌதீகம் கற்பிப்பதில் விற்பன்னராக விளங்கியவர். பல மாணவர்களது உயர் வாழ்வுக்கு வித்திட்டவர். நடேஸ்வரக் கல்லூரி மாணவர்களின் இதயம் கவர்ந்த ஆசிரியராகத் திகழ்ந்தவர். இடப் பெயர்வில் நடேஸ்வரக் கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வளாகத்தில் இயங்கியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தா மாணவர்களுக்கும் கைகொடுத்த நல்லாசான். மாணவர்களின் ஐயங்களை நல்லமுறையில் தீர்த்துவைக்கும் மதிநுட்பம் மிக்கவர். அன்னை சிவத்தமிழ்ச் செல்வி மீது மதிப்பும் மரியாதையும் கொண்டவர். எவ்வித ஆடம்பரமுமின்றி அடக்கமாக வாழ்ந்தவர். அறிவு நிறைந்த நிலையிலும் அதிகம் பேசாது அமைதி காத்தவர். நீதியை எடுத்துரைப்பவர். என்மீது மிகுந்த அன்புகாட்டிய நல்வழிகாட்டியை மறக்கமுடியவில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியுறப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

திரு. ஆறு. திருமுருகன்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை இலங்கை

அதிபர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்.

காலன் பருமுன்னே கண்பஞ்சடை முன்னே
பாலுண் கடவாய் படுமுன்னே - மேல்விழுந்தே
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானேயே கூறு.

*- பட்டனத்தார்.*

*தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யும் மழை.*

*- திருக்குறள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE

Maharajasri
D.S.Ratnasabapathy Kurukkal
Governing Authority & Chief High priest
Maavai Aadheenam,
Maviddapuram,
Tellippalai
Sri Lanka.

TP: 021 3210349

# ஆத்மசாந்தியுரை

உயர்திரு. முத்துக்குமாரு அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வர் சுப்பிரமணியம் அவர்கள் 24-01-2012 ஆம் திகதி அமரத்துவம் எய்தியமையை இன்டு மாவை ஆதீனம் மிகக் கவலை கொள்கின்றது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் அன்னாரது சேவைகள் மறக்கமுடியாதவை. அத்துடன், பொதுநலச்சேவைகளும் தனது சுயநலன் பாராது ஊன் உறக்கமின்றி இவர் பாடுபட்டமை சகலரும் அறிந்தமையே.

அடக்கம், அமைதி, பொறுப்புணர்வு, பொறுமை இவை களுடன் தனது அறிவாற்றலினால் பல மாணவர்களை உருவாக்கி இனறு உலகளாவிய ரீதியில் பரந்து பல உத்தியோகங்களில் இவரிடம் கல்விகற்றவர்கள் சிறந்து விளங்குகின்றார்கள். அத்துடன், தொழிலதிபர்களாகவும் வியாபாரங்களிலும் ஈடுபட்டு உன்னதமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் நமது கண்ணூடா கப் பார்த்து உயர்திரு சுப்பிரமணியம் சுப்பிரமணியம் ஆசிரி யர் அவர்களது சேவைகளை எண்ணிப் பெருமிதமடை கின்றோம். அன்னாரது இழப்பு எமக்கெல்லாம் பாரிய இழப்பாகும். அன்னாருடைய ஆத்மா சாந்தியடையப் என்லாம்வல்ல மாவைக் கந்தனின் பாதார விந்தங்களில் மலர்தூவிப் பிரார்த்திக்கின்றோம்.

*மஹாஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்,*

*மாவை ஆதீனகர்த்தா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடேஸ்வரா பெற்ற மணி

# அமரர் முத்துக்குமாரு சுப்பிரமணியம்

ஈழவள நாட்டிலே ஆழிக் கடலாய் வளங்கொழிக்கும் காங்கேசன் துறையிலே கலங்கரை விளக்கு கண்சிமிட்டும் ஒளியிலே அமைந்துள்ள நடேஸ்வரக் கல்லூரி பெற்ற இரத்தினங்களிலே ஒரு மணியாய் விளங்கியவரே மணியம் மாஸ்ரர்.

இலங்கைப் பல்கலைக்கழகத்திலே பட்டம்பெற்று எமது கல்லூரிக்கு 1959 ஆம் ஆண்டு ஆசிரியராகக் கடமையேற்றார். அன்றிலிருந்து 1993 ஆம் ஆண்டுவரை 34 ஆண்டுகள் எமது பாடசாலையின் மணியம் மாஸ்ரர் என்ற மகுடத்துடன் மாணவர்களுக்குப் பௌதிகவியல் பாடத்தைப் புகட்டினார். அவரின் கற்பித்தல் யுத்திகள், மாணவரை வழிப்படுத்தும் ஆளுமை எவராலும் மறக்கமுடியாது. ஆசிரியராகப் பிரதி அதிபராகத் தனது சேவையை எம் நடேஸ்வராவுக்கு வழங்கினார்.

தோற்றத்தில் கம்பீரம், தொனியில் ஆளுமை, உள்ளத்தில் அன்பு, மாணவர் உயர்வில் கண் என எத்தனையோ முத்துக்களை உருவாக்கிய சிற்பி. மணியம் மாஸ்ரர் வருகின்றார் என்றாலே மாணவர்கள் பயப்படுவார்கள். ஆனால், தோற்றத்திலே கம்பீரமாக இருந்தாலும் எதை எதை எப்போது கடைப்பிடித்தால் மாணவர்களை வளமாக்கலாம் என்ற உத்தி தெரிந்த மணியம் மாஸ்ரர் உள்ளத்திலே மாணவர்களிடையே இரக்கம், அன்பு கொண்டவர். நடேஸ்வரா விறாந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நடந்துவந்தாலே மாணவர்கள் அமைதியாக இருந்துகொள்வார்கள்.

இன்றும் வெளிநாடுகளில் எமது கல்லூரி பழைய மாணவர்கள் தம் பாடசாலையை மறக்காது அங்கேயே நடேஸ்வராவின் பிள்ளைகள் எனச் செயற்பட்டு மெலிந் திருக்கும் எமது கல்லூரிக்குக் கைகொடுக்கின்றார்கள் என்றால் இவ்வாறான நடேஸ்வராவின் மணிகளால்தான் என்பது மிகையாகாது. இந்தவகையில் எங்கள் மணியம் மாஸ்ரரும் ஒரு மணிதான். இறைபதம் அடைந்த எம் மணியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*யா/ நடேஸ்வரக் கல்லூரி,*
*காங்கேசன்துறை.*

---

**ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகங்கள்**

| ஆண்டு | பெயர் | நாடு |
|---|---|---|
| 1946-1953 | டிரைவ்லை | நோர்வே |
| 1953-1961 | பேக்ஹேமர்ஷில்கு | சுவீடன் |
| 1961-1971 | யூதான்ட் | பர்மா |
| 1972-1981 | குர்ட்வல்குஹிம் | ஆஸ்திரியா |
| 1982-1991 | ஜேவியர்பெரஸ்டிகொய்லர் | பெரு |
| 1992-1997 | பூட்ரோஸ் காலி | எகிப்து |
| 1997-2002 | கோபி அனான் | கானா |
| 2002-2007 | கோபி அனான் | கானா |
| 2007- | பாங்கிமூன் | தென்கொரியா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

மாவை.சோ.சேனாதிராசா பா.உ.,
யாழ்ப்பாணம்,
06.11.2009.



# முத்துக்குமாரு சுப்பிரமணியம் ஆசிரியருக்கு இதய அஞ்சலி

மணியம் ஆசிரியர் காலமாகிவிட்டார் என்ற தகவல் எம் இதயத்தில் ஒருவித பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

நான் காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்ற காலத்தில் மணியம் ஆசிரியரை அறிந்திருக்கின்றேன்.

1959 ஆம் ஆண்டு முதல் நடேஸ்வரக் கல்லூரியில் கணிதம் மற்றும் பௌதிகவியல் ஆசிரியராகக் கடமையாற்றியவர். 35 ஆண்டுகள் அந்தக் கல்லூரியில் ஆசிரியப் பணி புரிந்துள்ளார்.

அமைதியான அன்புள்ளங்கொண்ட நல்லாசிரியராக விளங்கியவர். ஆனால், மாணவர் ஒழுக்கத்தில் கண்டிப் பானவர். கல்லூரியின் பதில் அதிபராகவும் கடமை புரிந்துள்ளார். கல்லூரி அதிபராக அப்போதிருந்த திரு. மார்க்கண்டு அவர்களுக்கும் கல்லூரி நிர்வாகத்துக்கும் இடையில் முரண்பாடுகள் முற்றி, நிர்வாகத்துக்கு எதிராக மாணவர் போராட்டங்களும் இடம்பெற்றுவந்தன. காங்கேசன்துறை காவல்துறையினரின் தலையீடுகளும் தலைதூக்கி மாணவர்கள் அடக்கப்பட்டனர். அதிபர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள், மாணவர்கள் கல்லூரி நிர்வாகத்தினர் மீது குற்றங்கண்டித்திருந்த போதும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருக்கவில்லை. காவல்துறையின் தலையீட்டை அதிபர் அனுமதிக்கவில்லை. மணியம் ஆசிரியர் காவல்துறையினரின் தலையீடு வந்துவிடக் கூடாது என்பதில் முன்னின்று பேச்சு நடத்தினார்.

அவரை நான் அறிந்தளவில் பொதுவுடமைக் கொள்கை களில் ஈடுபாடு கொண்டிருந்தவராகவும் ஆனால், கல்லூரி யில் அரசியல் ஈடுபாடு காட்டாதவராகவும் விளங்கினார். அதிபர் மார்க்கண்டு அவர்களும் அவ்வாறே விளங்கினார்.

ஆனால், 1961 ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் தலைமையில் வடக்கு - கிழக்கு மாநிலம் முழுவதும் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் நடைபெற்றபோது கல்லூரி மாணவர்கள் அணிவகுத்து யாழ்.கச்சேரிக்குச் சென்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டவேளை அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் ஆதரவாக இருந்தனர். அந்நாள்களில்தான் நான் சுப்பிரமணியம் ஆசிரியருடன் கலந்துரையாடும் சந்தர்ப்பத்தைக் கொண்டிருந்தேன். கல்லூரி நாள்களை மறந்துவிடமுடியாதமையைப் போல மணியம் ஆசிரியர் அவர்களையும் மறந்துவிட முடியாது.

மணியம் ஆசிரியர் அவர்கள் சாதாரணமாக அதிகமாகப் பேசமாட்டார். மெல்லிய புண்ணகையால் எங்களை ஈர்த்துக்கொண்டவர். விளையாட்டுத்துறையிலும் ஈடுபாடு கொண்டவர். விளையாட்டு மைதானத்துக்கு வந்து ஊக்க மளிப்பார். கல்லூரியின் வளர்ச்சியிலும் மாணவர் கல்வி உயர்விலும் ஒழுக்கம் பேணுவதிலும் என்றும் அர்ப்பணிப் புடன் செயலாற்றுவதை அறிந்திருக்கின்றேன். ஆசிரியரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவாக மதிக்கும் அந்தக் காலத்தை நினைவுகூரும் பொழுது மணியம் ஆசிரியரும் பசுமையாக எம் இதயத்தில் நினைவுடன் பதிந்துள்ளார். எம் இதயம் நிறைந்த நினைவுடனும் நன்றியுடனும் எமது அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

அன்புடன்

மாவை சு.சேனாதிராஜா (பா.உ.)
பொதுச்செயலாளர்,
இலங்கை தமிழரசுக் கட்சி.

நானும் கடவுள். நீங்களும் கடவுள் உங்களுக்கும் எனக்கும் உள்ள ஒரே வேறுபாடு நான் அதை உணர்ந்திருக்கிறேன். நீங்கள் அதை உணரவில்லை என்பதே நான் யாருடைய நம்பிக்கையையும் அழிக்க வரவில்லை அவரவர் நம்பிக்கையில்.

அவரவர் உறுதியாக இருக்க வேண்டும் அப்போது தான் ஒரு கிறிஸ்தவன் சிறந்த கிறிஸ்தவனாகவும் முஸ்லிம் சிறந்த முஸ்லிமாகவும் இந்து சிறந்த இந்துவாகவும் திகழ முடியும். பிரபஞ்சத்தில் உள்ள ஒவ்வொரு உயிரினுள் இருக்கும் ஆன்மாவிலும் கடவுளின் பிரதிநிதித்துவம் இருக்கிறது என்பதை அவர்களை உணர வைத்துக் கடவுளைச் சென்றடையும் வழியின் மூலம் அவர்களைச் சகோதரத்துவம் என்ற பிணைப்பின் கீழ் ஒரே குடும்பமாக இணைப்பதே என் குறிக்கோள். அதற்காக நான் வருகை தந்துள்ளேன்.

– பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மறைந்துவிட்ட மாணிக்கம்

'மணியம் மாஸ்டர்' என்று மாணவர்களால் பிரியமுடன் அழைக்கப்பட்டவரும் சிறந்த கல்விமானும், பௌதிகவியல் விற்பன்னருமான திரு.எஸ்.எம். சுப்பிரமணியம் அவர்களின் அமரத்துவம் எமது மனங்களில் மிகுந்த சோகத்தை ஏற்படுத்துகின்றது. மனிதரில் மாணிக்கம் என்று பலராலும் மதிக்கப்பட்ட அமரர் அவர்கள் ஆசிரியர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். இவ்வாறான ஆசிரியர்களை மாணவர்கள் என்றுமே மறப்பதில்லை. பாடசாலை வாழ்க்கை முடிந்து பல்லாண்டுகளுக்குப் பிறகும் ஆசிரியர் ஒருவரைத் தேடி மாணவர்கள் வருவதென்பது இன்றைய காலகட்டத்தில் நம்பமுடியாத ஒன்று. ஆனால், உடுவில் மணியம் மாஸ்டர் வீட்டுக்கு எப்போது சென்றாலும் யாராவது ஒரு பழைய மாணவர் இவரைத்தேடி வந்து இவரோடு உரையாடிச் செல்வதை அவதானிக்கலாம்.

அமரர் அவர்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழையமாணவராய் கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர். காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் தனது ஆசிரிய சேவைக்காலம் முழுவதையும் அர்ப்பணித்து அளப்பரிய சேவையாற்றியவர். நடேஸ்வராச் சமூகம் 'நமது மணியம் மாஸ்டர்' என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் இவ்வாசான், ஆசிரியர்களாய் உள்ள அனைவருக்கும் சிறந்த முன்னோடியாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிக்கப்பட்டார். இவரது கல்விப் பங்களிப்புகள், பௌதிகவியல் கற்பித்தல்கள், மாணவர் நலனில் கொண்ட ஈடுபாடு என்பவை என்றுமே மறந்துவிட முடியாதவை ஆகும்.

நல்லவராய், பண்பாளராய், நேர்மை நெறிநின்று மாணவர்களுக்காக வாழ்ந்த அமரர் அவர்களின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

*க.சிவாஜி (உடுவில்)*
*ஓய்வுநிலை அதிபர்,*
*யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,*
*கந்தரோடை, சுன்னாகம்.*

## கல்வி பற்றி சுவாமி விவேகானந்தர்

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி ஆகும்.

எத்தகைய பயிற்சியின் மூலம் மன உறுதியின் வேகமும் அதன் வெளிப்பாடும் தன்மையும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, பயன்தரும்வகையில் அமைகின்றதோ, அந்தப் பயிற்சிதான் கல்வி ஆகும்.


மனதை ஒருமுகப்படுத்துவதுதான் என்னைப் பொறுத்த வரையில் கல்வியின் அடிப்படையான லட்சியமாகும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமைக்கும் ஏமாப் புடைத்து"

\- திருக்குறள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்விச் சமூகத்துக்குப் பேரிழப்பு

'கற்றாய்ந் தொழுகிய' ஒரு சிறந்த கல்விமான் பெருமதிப்புக்குரிய சுப்பிரமணியம் மாஸ்ரர் அவர்கள். அவரது இழப்பு கல்விச் சமூகத்துக்கு ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். இவ்வாறான சிறந்த ஒரு கல்விமானை - மற்றவர்களால், குறிப்பாக மாணவர்கள் அனைவராலும் மதிக்கப்படுகின்ற ஒரு குருநாதரை தற்காலத்தில் காண்பது மிக அரிது.

நான் அவரிடம் கல்விகற்கவில்லை. ஆயினும், 1996 ஆம் ஆண்டு முதல் நடேஸ்வரக் கல்லூரியின் ஆசிரியர் ஞானி ரீச்சர் மூலமாகவே மணியம் மாஸ்ரர் என்று அனைவராலும் போற்றப்படுகின்ற சிறந்த கல்விமானுடன் பழகுகின்ற வாய்ப்புக் கிடைக்கப்பெற்றேன். கிட்டத்தட்ட 16 வருடங்கள் நான் அவருடன் நெருக்கமாகப் பழகினேன். நான் அவரிடம் கல்வி கற்கின்ற பாக்கியம் பெற்றிராவிட்டாலும் அவர் என்னுடன் மிகவும் அன்பாகப் பழகுவார். நான் அப்போ நடேஸ்வரக் கல்லூரியில் தொண்டர் ஆசிரியராகக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தேன். அப்போது கல்லூரி வீழ்ச்சியை நோக்கி - அழிவை நோக்கி - சென்றுகொண்டிருந்த காலம். கல்லூரியை மூடுகின்ற ஒரு நிலைமை ஏற்பட்ட காலம் அது. கல்வித் திணைக்களத்தினரும் அப்போது கல்லூரியை நிர்வகித்தவர்களும் கூடக் கல்லூரியை மூடுவதில் அதீத அக்கறை காட்டினார்கள். அப்போது நானும், ஞானிரீச்சர், திருமதி க.சிவாஜி, திரு.ப.கஜேந்திரன், அப்போதைய நடேஸ்வரக் கல்லூரி பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு.சிவபாலச்சந்திரன் இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரும் சேர்ந்து கல்லூரியை மூடுவதை எதிர்த்துக் கடுமை யாகப் போராடினோம். திருமதி சிவாஜி அவர்களின் தந்தை நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயத்தின் ஓய்வு நிலை புகழ்பூத்த அதிபர் திருமிகு சி.திருநாவுக்கரசு ஐயா அவர்கள் பாடசாலை மூடுவதை எதிர்த்துக் கல்லூரிச் சமூகம் சார்பில் கல்வித் திணைக்களத்துக்கு மிகக் காத்திரமான கடிதம் ஒன்றை வரைந்தார். அப்போது மணியம் ஆசிரியர் அவர்கள் சேவையில் ஓய்வு நிலை யில் இருந்தாலும் கல்லூரியின் வளர்ச்சி தொடர்பில் எமக்குப் பலவழிகளிலும் ஆதரவும், ஆலோசனைகளும் நல்கினார். கல்லூரியின் பழைய மாணவரும் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா அவர்களிடமும் தடுத்து நிறுத்துமாறு வேண்டுகோள் விடுத்தோம் இத்துணை நடவடிக்கையின் பயனாக கல்லூரி மூடப்பட எடுக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் முறிய டிக்கப்பட்டன. அப்போதிலிருந்துதான் எனக்கும் மணியம் மாஸ்டருக்குமிடையிலான நெருக்கம் வலுப்பெற்றது.

அவர் என்னைத் தனது பிள்ளைபோன்று சகல விடயங் களையும் பகிர்ந்துகொள்வார். ஏதாவது உதவி தேவைப் பட்டாலும் என்னை அழைக்காது, தானே என்னைத் தேடி வந்து சந்திப்பார். அவ்வாறு ஒரு எளிமை உள்ளம் படைத்தவர். அதனால்தான் என்னவோ அவரது இறுதி நிகழ்வுக்குத் தலைமை தாங்குகின்ற ஒரு பாரிய - கிடைத் தற்கரிய - பொறுப்பு - பேறு - எனக்குக் கிடைத்தது.

மணியம் ஆசிரியர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடில் நூல் கணக்காக எழுதிக் கொண்டே செல்லலாம். அவர் ஒரு நல்ல மனிதர். வெண்ணிற ஆடையே கூடுதலாக அணிவார். அந்த ஆடைபோன்று அவரது உள்ளமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமானது; வெண்ணிறமானது; கள்ளங்கபடமற்றது. பார்த்தோரை நடுங்க வைக்கும் தோற்ற முடையவர் ஆனால், அன்பே வடிவம் கொண்டவர். கற்றோர்க் குரிய சிறந்த குணமாகிய நாவடக்கமுடையவர். எல்லோர் மீதும் இரக்கம் உடையவர். தூரநோக்கும், பொது நலவாயமும் உடையவர். சிறந்த சிந்தனையாளர். பிரச்சினைகளை சுலபமாக எதிர்கொண்டு தீர்த்து வைக்கின்ற புத்திசாதுர்யம் உடையவர். நேர்மை, தன்னடக்கம், விவேகம், புத்தி சாதுர்யம், பொறுமை, அன்பு, துடிப்பு, உத்வேகம், செயற்றிறன் என்பனவற்றை ஒருங்கே அமையப்பெற்றவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற பொய்யாமொழியின் வாக்கிற்கிணங்க வானுறையும் தெய்வமாகி இன்று அனைவர் உள்ளத்திலும் நீங்கா இடம்பிடித்துள்ள மணியம் ஆசிரியர் அவர்கள், தன் பூத உடலை நீத்தாலும் அவரது புகழுடல் இன்றும் எம்முடனே நடேஸ்வராக்கல்லூரியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு, நடேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கின்றது.

"பிறப்பவர் எல்லாரும் இறப்பது நியதி" இது மணியம் ஆசிரியருக்கு மட்டும் விதிவிலக்கன்று. அந்தவகையில் அவரது ஆத்மா மீண்டும் பிறப்பற்ற நித்தியப்பேரின்ப வாழ்வு வாழவேண்டும் என்று பிரார்த்தித்து பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எனது ஆறுதல் களைத் தெரிவித்து அமைகின்றேன்.

*மயன் தெல்லியூர் சி. ஹரிகரன்,*
*கௌரவ உறுப்பினர்,*
*வலி.வடக்கு பிரதேச சபை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவத்தமிழ்ச்செல்வி அம்மாவின் நன்மதிப்புப் பெற்ற நல்லாசான் "மணியம் மாஸ்ரர்"

எங்கள் எல்லோராலும் 'மணியம் மாஸ்ரர்' என்று அன்பாக அழைக்கப்படுபவர் அமரர் முத்துக்குமாரு சுப்பிரமணியம் ஆசிரியர். இவர் கடந்த 23-01-2012 ஆம் திகதியன்று அமரராகிவிட்டார் என்ற செய்தி அனைவரையும் வாட்டியது. அவருடைய மறைவு கல்வி உலகுக்கு ஈடுசெய்யமுடியாதது.

மாஸ்ரர் ஐயா தமது பல்கலைக்கழகக் கல்வியை 1954 ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தார். 1958 ஆம் ஆண்டு தமது பல்கலைக்கழக இறுதிப் பரீட்சை எழுதியதும் இவருக்குத் தந்தையார் இறந்த செய்தி கிடைத்தது. இதனால் அவர் பெரிதும் பாதிப்படைந்தார். ஆயினும் இவருக்கு நடேஸ்வரக் கல்லூரிச் சமூகம் தற்காலிக ஆசிரிய நியமனத்தை வழங்கினர். இவருடைய கல்வி கற்பிப்பதன் சிறப்பை நோக்கிய கல்லூரிச் சமூகம், 1959 ஆம் ஆண்டு முதல் இவரை நிரந்தர ஆசிரியராக நியமித்தது. இவர் தாம் ஓய்வுபெறும் காலமாகிய 1993 ஆம் ஆண்டு வரை நடேஸ்வரக் கல்லூரியில் பணியாற்றித் தன் சேவைக்காலம் முழுவதும் நடேஸ்வராவுக்காகவே உழைத்தார்.

கல்லூரிக் கடமையில் மிகவும் கண்ணியமானவர். ஒழுக்காற்று நடவடிக்கை ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும், பணியாற்றியுள்ளார். இவர் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச் செல்வி அம்மா அவர்களைப் போல நேர, நியமத்துக்கு மிகுந்த மதிப்புக் கொடுப்பவர். இவருடைய மோட்டார்சைக்கிள் (Raam) ராம் 1ஸ்ரீ2477 இலக்கம் கொண்டது. இந்த வாகனத்தில் பயணம் செய்யும்போது தினமும் காலை 7.20 மணிக்குத் துர்க்கை அம்மன் கோவில் வாயிலில் நிற்பார். பின்னர் 7.30 மணிக்கு நடேஸ்வரக் கல்லூரி வாயிலில் நிற்பார். இவருடைய நேர நியமம் இன்றுள்ள ஆசிரிய உலகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவருடைய பாடங்களான பௌதிகவியல், பிரயோக கணித பாடங்களை மாணவர்களுக்குக் கற்பிப்பதில் இவருக்கு நிகர் இவரே ஆவார். இவரது கற்பித்தல் திறமை தனித்துவமானது. எங்கள் துர்க்கை அம்மன் கோவில் 31-05-1992 ஆம் ஆண்டு விமானக் குண்டுவீச்சுக்கு இலக்கானது. அப்போது சிவத்தமிழ்ச் செல்வி தக்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரும் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளும் மிகக் கஷ்டமாக இடம்பெயரவேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்கள் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆயினும், கோயில் சொத்துக்கள், தர்மங்களை வைப்பதற்குச் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்குப் புகழிடம் வழங்கியவர் மணியம் மாஸ்ரர் அவர்களே! இவர் சிறந்த உதவியோடு மட்டும் நில்லாது துர்க்கை அம்மன் கோவில் மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு விஞ்ஞான பாடம், கணித பாடம் என்பவற்றுக்குப் பிரத்தியேகக் கல்வியும் வழங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் அன்புக் கட்டளைக்கு மதிப்பளித்தவர் இவர்.

மீண்டும் 1995 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டு இடம்பெயர்வின்போது இல்லப் பிள்ளைகளுக்குத் தந்தைபோலப் பணியாற்றி உசன் கந்தசுவாமி கோவில் வளாகத்துக்கும் வந்தார். அங்குகூட அம்மையார் மணியம் மாஸ்டரைத் தங்கவைத்து பிள்ளைகளுக்குக் கல்விப் பணியைத் திறம்படச் செய்தார். எல்லா முதன்மையும் மணியம் மாஸ்டருக்கு வழங்கிய சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் நன்மதிப்பைப் பெற்றவர் மணியம் மாஸ்ரர். இவருடைய கல்விப் பணி, சமுதாயப் பணி, அனைவராலும் நன்கு மதிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டு சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் மறைவினால் பெரிதும் மனம் வருந்தினார். எம்மோடு மிகவும் நட்புக்குப் பாத்திரமான நல்லாசான் மணியம் மாஸ்ரர் ஐயாவின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துவோமாக.

*- கா.சிவபாலன்.*

உண்மை, நேர்மை அமைதி, அன்பு மற்றும் அஹிம்சை ஆகிய ஐந்தும் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ்வதற்கான வழி. கடவுளிடம் அன்பு செலுத்துதல், தவறு செய்ய அஞ்சுதல் மற்றும் ஒழுக்க நெறிகள் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

எனது வாழ்க்கை, எனது செய்தி. தன்னலமற்ற சேவை மூலம் பாவங்களில் இருந்து வீடுபெறமுடியும். மனிதனுக்குச் செய்யும் சேவை கடவுளுக்குச் செய்யும் தொண்டு. *- பகவான் சத்யசாயிபாபா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இனிய நண்பர் நல்ல உறவினர்

## அமரர் சுப்பிரமணியம்

இனிய நண்பர், உறவினர், மனிதநேயம் உள்ள நல்ல மனிதர் அமரர் முத்துக் குமாரு சுப்பிரமணியம். அன்னாரை நினைவுகூறும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. சங்கானையில் விவசாய குடும்பத்தில் இவர் பிறந்தவர். நானும் அதுபோல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தேன். இருவரும் ஆரம்பக் கல்வியைச் சங்கானை சிவப்பிரகாச தமிழ் பாடசாலை யில் தொடங்கி, பின்பு சண்டிலிப்பாய் இந்து ஆங்கிலப் பாடசாலையில் தொடர்ந்தோம். இருவரும் நல்ல நண்பர் களாக வாழ்ந்தோம். அன்னார் வடமாகாண ஆசிரியர் சங்கத்தால் நடத்தப்பட்ட 8 ஆம் வகுப்புக்குரிய NPTA பரீட்சையில் விசேட சித்திபெற்றார். பின்னர் அன்னார் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குச் சென்று பல்கலைக்கழகம் செல்லும்வரை அங்கு கற்று, கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பைத் தொடர்ந்து B.Sc. பட்டம் பெற்றார்.

அன்னாரை 'மணியம்' என்று அழைப்பேன். இருவரும் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் தொட்டிலடி சனசமூகநிலையம் சென்று பத்திரிகை வாசிப்பது, வானொலி கேட்பது தினமும் தவறுவது கிடையாது. அத்துடன் நல்ல நண்பர்களை உள்வாங்கிக் கொண்டோம். எங்கள் நாட்டில் சுதந்திரத்தின் பின்னர் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டு, சட்டமாக்கப்பட்டது. அதன் காரணத்தால் வறிய மாணவர்கள், பின்தங்கிய கிராம மாணவர்கள் ஆரம்பப் பாடசாலை தொடக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் வரை இலவசமாகக் கல்வி கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்தது. அன்னார் பட்டப்படிப்பை முடித்து வந்தார். இந்தக் காலத்தில் நடேஸ்வரக்கல்லூரியின் முகாமையாளர் அன்னாரின் திறமையை அறிந்தமையால் ஆசிரியத் தொழிலை வழங்கிக் கௌரவித்தார்.

மணியம் பாடசாலையின் வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் வளர்ச்சிக்காகவும் மிகவும் கடினமாக உழைத்தார். பாடசாலை ஆசிரியர்கள், காங்கேசன்துறை மக்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டார். அன்னார் வாழ்க்கைத் துணைவியை உடுவில் கிராமத்தில் பெற்றதினால், துணைவியாரின் உடுவில் இல்லத்தில் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். ஓய்வு நேரங்களில் மாணவச் சமூகத்துக்குக் கணிதம், பௌதிகம் பாடங்களைக் கற்பித்து வந்தார். அந்தக் காலத்தில் எமது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக நான் நாட்டை விட்டு இடம்பெயரவேண்டிய நிலைமை ஏற்பட்டது. மணியம் தான் பெற்ற கல்வியை மாணவச் சமூகத்தை உருவாக்கவேண்டும் என்ற மன உறுதியால் தற்காலிகமாகத் தென்மராட்சிவரை இடம்பெயர்ந்து சிறிது காலத்தில் தங்கள் வீட்டுக்கு வந்து தனது சேவையைத் தொடர்ந்தார். எங்கள் இருவரின் நட்பின் வலிமையால் 17 ஆண்டுகளின் பின்னர் எங்கள் நாட்டுக்கு வந்து மணியம் என்னும் நண்பரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மணியம் தன் அருமை வாழ்க்கைத் துணைவியை இழந்த பின்பும் மன உறுதியுடன் தனிமையில் வாழ்ந்துவந்தார். மிகக் குறுகிய காலம் இருவரும் அடிக்கடி சந்தித்து வந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன இருந்தாலும் மரணம் நிச்சயிக்கப்பட்டது. இப்படி யான மரணம் கிடைப்பது அரிது. எதுவித கானமும் இன்றி மரணத்தைத் தழுவிக்கொண்டார். இப்படியான கல்விமான்களின் இழப்பு கல்விச் சமூகத்துக்கு பெரும் இழப்பாகும். அன்னாரின் கல்விச் சேவையை நினைவுகூரும் அதேநேரம் அவரிடம் கல்வி கற்ற பழைய மாணவர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் மற்றும் அனைவருடனும் இணைந்து அன்னாரை நினைவுகூரும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டி எனது சிறிய நினைவை நிறைவுசெய்கின்றேன்.

*வ.திருநாவுக்கரசு*
*நண்பர்.*

## அறுகரிசி எப்படிப் போடவேண்டும்?

அறுகு, முளை உடையாத பச்சை அரிசி, மஞ்சள்மா மூன்றும் கலந்ததே அறுகரிசி எனப்படும். அறுகு - விரைவாகப் படரக்கூடிய மூலிகை, அரிசி - எமது வாழ்வாதாரமான உணவுப்பொருள். மஞ்சள் - மங்களப் பொருள். மூன்றையும் இரு கைகளாலும் எடுத்து மூன்றுமுறை மணமக்கள் உச்சியில் பாதாவி கேசமாக (காலிலிருந்து தலையை நோக்கி) மணமக்கள் உச்சியில் போடவேண்டும். போடும்போது அறுகுபோல் சந்ததியும் தளைத்து, அரிசிபோல் எந்தக் குறைவுமில்லாமல், மஞ்சல் போல் மங்கலமாக வாழ்வீர்கள் என மனத்தால் அல்லது வாயால் வாழ்த்தவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சங்கானைக்குப் பெருமைசேர்த்த சிறந்த கல்விமான் சுப்பிரமணியம்

நித்திலங் கொழிக்கும் நெடுங்கடல் சூழ்ந்த இரத்தின தீவகம் இந்துமகா சமுத்திரத்தின் முத்தென மிளிரும் இலங்கைத் தீவின் எளில்கொஞ்சும் இயற்கைப் பூங்காவான சங்கானை மண்ணில் பிறந்த அமரர் முத்துக்குமாரு சுப்பிரமணியம் அவர்கள் தனது இளம் பராயத்தில் கல்வியைச் சீராகக் கற்று பின்னர் எமது ஊருக்குப் பெருமைதேடித் தரக் கூடிய சிறந்த கல்விமானாய்த் திகழ்ந்தார்.

இவர் இளைஞனாக இருந்த காலப்பகுதியில் தனது கல்வியின் ஆளுமையினால் எல்லோரையும் அரவணைத்து, நற்பண்புகளைப் போதித்து நல்ல வழியில் எல்லோரும் செல்ல ஒரு வழிகாட்டிப் பலகை போன்று பிரகாசித்தார். கல்வியைப் பொறுத்தவரை இன்று யாழ்.மாவட்டத்தில் மட்டுமல்லாது உலகலாவிய ரீதியில் பல்லாயிரம் கல்விமான்களை உருவாக்கிய கல்விச் சாலையாகத் திகழ்ந்தார். அமரர் எவருக்கு எதைச் செய்தாலும் பிரதியுப காரம் எதிர்பார்க்கமாட்டார். நேர்மைக்கும் அன்புக்கும் அறிவுக்கும் ஆற்றலுக்கும் இவருக்கு இணை இவரே! அவருடைய இறுதிக் காலப்பகுதியில் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தபோது பலதரப்பட்ட விடயங்களை அவருடன் பேசுவோம். அதன்மூலம் எனது அறிவை வளர்க்கக்கூடியதாக எனக்கு இருந்தது.

அன்னாரின் இழப்பானது கல்விச் சமூகத்துக்கும் அவர்களது உறவினர்களுக்கும் மிகுந்த கவலையை ஏற்படுத்தியிருந்தாலும் அவர் கூறியமை போல அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் திடீரென நிகழ்ந்தது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல செங்கல்படை மகாதேவப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றேன்.

*குணஸ்ரீ*

*செயலாளர்,*

*சங்கானை பட்டின அபிவிருத்திச் சபை,*

*உபதலைவர்,*

*சங்கானை வைத்தியசாலை அபிவிருத்திச் சபை.*

## *தியாகம்*

*இளைஞர்களே! யுவதிகளே!*

அன்பையும், தியாகத்தையும் உங்களது பிராணனாக, மூச்சுக் காற்றாக எண்ணுங்கள். உங்கள் புலன்களை அடக்குங்கள். எந்த ஒரு ஆன்மீக சாதனை வெற்றிபெற வேண்டுமானாலும், புலனடக்கத்தின் மூலம் தெய்வமாக உயரமுடியும். கோபம் என்பது நாயின் இயல்பு. சலனப்படுத்திக் கொண்டே இருப்பது குரங்கின் குணம். உனக்குக் கோபம் வரும்போது 'நான் நாயல்ல, நான் மனிதன்' என்று நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அதைப்போலவே மனம் அலைபாயும்போது உனக்குள் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொள். 'நான் குரங்கல்ல, நான் மனிதன்' என்று. சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்ஸை ஆகியவைதான் உண்மையான மனித உயர்குண நலன்கள். இந்த குண நலன்களை மனிதனின் பஞ்ச பிராணன்களுக்கு ஒப்பிடலாம் - பிராண அபான, வ்யான, உதான மற்றும் சமான. இந்த குணநலன்கள் ஏதாவது ஒன்றை இழந்தாலும் கூட வாழ்க்கையே துறந்து விடுவதைப் போன்றது. ஒரு குணநலனும், மற்றொன்றின்றி வாழ இயலாது. இக்குணநலன்களை இழந்துவிட்டதால் மனிதன் இன்று வாழும் பிணமாக இருக்கிறான். இக் குணநலன்களின் மேல் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அவற்றைப் போற்றி வளர்த்து, அவற்றிடமிருந்து கிடைக்கும் ஆனந்தத்தை அனுபவியுங்கள்.

- சத்ய சாய்பாபா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சுப்பிரமணியமும் அவரது துணைவியார் செல்வமும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் அபிமானத்துக்குரிய மாணவர் Dr.தங்கராசா தனது குருவுக்கு அஞ்சலி செலுத்துகின்றார்.



அமரரின் செல்லப்பிராணியின் அஞ்சலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் பரிதவிக்கும் கண்ணீர்க் காணிக்கை

| | | |
|---|---|---|
| மண்ணகம் |  | விண்ணகம் |
| மகிழ | | நெகிழ |
| 05 ~ 02 ~ 1935 | | 24 ~ 01 ~ 2012 |

## அமரர் முத்துக்குமாரு சுப்பிரமணியம்

(மணியம் மாஸ்ரர், ஓய்வுநிலை பிரதி அதிபர் - நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை)

தோன்றிற் புகழொடு தோன்றி நின்றீர்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்ந்து வந்தீர்
பண்புடனே பலருமைப் போற்றி யேத்த
அன்புரிமை அனைவரிடமும் கொண்டு நின்றீர்

சிறப்புறு தலைமைத்துவம் நீர் பெற்றுநின்றீர்
ஆசிரியத்துவத்தை மாணவர்க் கினிதே யாற்றினீர்
பொதுவுடமை வாதியாகத் திகழ்ந்து நீங்கள்
ஆற்றிய சேவையை வையகம் போற்றிடும்!

மாசற்ற சேவையை மண்ணுக் காற்றினீர்
தேசம் தளைத்திட உருவாக்கினீர் நல்மாணாக்கரை
பேச வார்த்தை யின்றி நாம் கதறுகின்றோம்
பாசங்கொண்டு வுமைப் பிரிந்த சோகத்தாலே!

*ப.கஜேந்திரன், சி.ஹரிகரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05 | 24 |
| 02 | 01 |
| 1935 | 2012 |



எமது சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் போஷகரின் அண்ணன்

அமரர்

## முத்துகுமாரு சுப்ரமணியம் (V.S.C.)

(இளைப்பாறிய அதிபர்)

எங்கே வாழ்க்கை தொடங்கும்
அது எங்கே எவ்விதம் முடியும்
இதுதான் பாதை இது தான் பயணம்
என்பது யாருக்கும் தெரியாது
மனித உருவங்கள் மறையலாம்
மாண்ட நெஞ்சில் பதிந்தவை அழியாது
நேற்றுவரை எங்களுடன் இன்முகம் காட்டி
நேசமுடன் பழகியதை எம்மால் மறக்க முடியுமா?
இன்று முதல் எம்மை எல்லாம்
பரிதவிக்கவிட்டு பரமனின் பாதங்களை
பற்றிய உன் போல் அன்புள்ளங்கொண்ட
இனியவரை எங்குநாம் தேடுவோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

25.01.2012

பிரிவுத் துயர் பகிரும்
சங்கானை இந்து இளைஞர் மன்றம்

# கண்ணீர் அஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 | 24 |
| 02 | 01 |
| 1935 | 2012 |



அமரர்

## முத்துக்குமாரு சுப்பிரமணியம்

யா/நடேஸ்வரக் கல்லூரியில் தொடர்ந்து ஆசிரியராய் பணிபுரிந்து
பின் அதிபராய் உயர்ந்து பலரின் கல்வி உயர்வுக்கு காவலாய் அமைந்து
ஓய்வு பெற்று இன்று அமரத்துவம் அடைந்த அமரர் முத்துக்குமார் சுப்பிரமணியம்
அவர்களின் கமலப்பாதங்களுக்கு காணிக்கையாக்குகிறோம்

கல்விக்கலங்கரையாய்
கண்ணின் மணி ஒளியாய்
கற்பக தரு உருவாய் – நீயிருந்து
நடேஸ்வராதனில் நற்பண்பு வளர்த்து
அனைவரது வாழ்வினிலும்
அன்பொளி ஏற்றினாய் – ஆனால்
பண்பற்ற காலன் இன்று
உன் உயிரை பறித்தானோ?
பதறுகின்றோம் நாமெல்லாம் – உந்தன்
ஆத்மா சாந்திக்காய் வேண்டி நிற்போம்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

நடேஸ்வராக்கல்லூரியின்
பழைய மாணவர்கள்
(வைத்தீஸ்வரன், ஜெயதாசன்,
யோகேஸ்வரா, ஜெயபரஞ்சோதி)

# கண்ணீர் அஞ்சலி

**அமரர். முத்துகுமாரு சுப்ரமணியம் (V.S.C)**

(இளைப்பாறிய அதிபர்)



**தோற்றம் : 05.02.1935** **மறைவு: 24.01.2012**

நேற்றுச் சிரித்தபடி நிஜமாய் இருந்தவரே
கண்மூடி விழிப்பதற்குள் கதை முடிந்து போனதெங்கே
ஈவிரக்கம் இல்லா காலன் எங்குதான் கொண்டு சென்றான்
ஊதிய பலூனில் ஊசி துளைத்தது போல
உன் மறைவுச் செய்தி கேட்டு உதிரமே உறைந்ததையா
நின்றவர் அழுகின்றார் நினைத்ததுமே அழுகின்றார்
உள்ளத்தால் நாமெல்லாம் உன்னி உன்னி அழுகின்றோம்
நித்தமும் உன் உருவம் நினைவில் துடிக்குதையா
பிறக்கும்போது நீ மட்டுமே அழுதாய் - இன்று
இறக்கும்போது ஊரே அலறுதையா

**அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**பிரிவால் துயருறும்**

குணபூரீ, அருண், தீபன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்ற -
பொய்யாமொழியின் வாக்கிற்கமைய, எமது
குடும்பதீபம் அணைந்த செய்தியறிந்து ஓடோடி
வந்து அஞ்சலி உரை நிகழ்த்திய அவரது
மாணவர்கள், சமூகப் பெரியார்கள்,
பெதுமக்களுக்கும் -
அமரரின் மறைவுக்கு வந்து அஞ்சலி
செலுத்தி,மலர்வளையம் வைத்து எமக்கு ஆறுதல்
அளித்த அன்புசார் பெரியோர்களுக்கும் - நூலுக்கு
அஞ்சலியுரை வழங்கிய பெரியார்களுக்கும் -
தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த
அனைத்து அன்புள்ளங்களுக்கும்
இந்த நூலை வடிவமைத்த மருதனார்மடம்
'அபிஷேக் மல்ரி ஸ்பொட்' நிறுவனத்துக்கும் - எமது
உள்ளங்கனிந்த நன்றிகள்.


**~ குடும்பத்தினர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கே நம்பிக்கையிருக்கிறதோ
அங்கே அன்பிருக்கிறது
எங்கே அன்பிருக்கிறதோ
அங்கே அமைதியிருக்கிறது
எங்கே அமைதியிருக்கிறதோ
அங்கே ஸத்யம் இருக்கிறது
எங்கே ஸத்யம் இருக்கிறதோ
அங்கே கடவுள் இருக்கிறார்
எங்கே கடவுள் இருக்கிறாரோ
அங்கே ஆனந்தம் நிறைகிறது
– பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org